ஆய்வு செய்து வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அதற்குண்டான பணிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்பது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்தில் கலந்து பேசிவருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை, செய்வதைத்தான் சொல்வோம், சொல்வதைத்தான் செய்வோம் என்பதுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தாரக மந்திரம். 2016–ல் சொன்னோம், செய்யவில்லை என்று சொன்னார்கள். அதற்கான கருத்துருக்கள் எல்லாம் பெறப்பட்டு ஆய்வில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

167—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

***5307—திரு. ஆர். தங்கதுரை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைகளை சாதனைகளாக்கி, சாதனைகளை சரித்திரமாக்கி 234 சட்டமன்ற உறுப்பினர்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், உயர்ந்த புகழும் பெற்று பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் வாழ்த்துக்கு ரொம்ப நன்றி.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளர் தேர்வுக்காக அழைத்திருந்தார்கள். அப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். M.A.,B.L., படித்துவிட்டு T.N.E.B.–யில் பணி செய்வதாக ஏன் மனுவில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் 'அம்மா, நான் அப்போது சாதாரண S.S.L.C., மட்டும்தான் படித்திருந்தேன். அதன்பிறகு, புரட்சித் தலைவர் காலத்தில் T.N.E.B.–யில் வேலை கிடைத்து, பின்பு தொலைதூரக் கல்வியில் சேர்ந்து M.A. படித்தேன், பின்னர், மதுரையில் மாலை நேர சட்டக் கல்லூரியில் சேர்ந்து B.L., பட்டத்தைப் பெற்றேன்' என்றேன். நான் படித்த பிறகு, மாலை நேர சட்டக் கல்லூரியை மூடிவிட்டார்கள். நான் அந்தப் பாக்கியத்தைப் பெற்றேன் என்பதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு இதை ஞாபகப்படுத்துகிறேன். 2002–ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற ஆட்சியின்போது நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் அண்ணன் திரு. ஜெயக்குமார் அவர்கள்தான் பட்டத்தை எனக்கு வழங்கினார்கள். நீங்கள் ஆதாரம் கேட்பீர்கள் என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர் ஜெயக்குமார் அவர்களிடம் பெற்ற பட்டத்தை தற்போது உங்களிடத்தில் நான் காட்டுகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பட்டம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் போதும், நாங்கள் நம்புகிறோம். சொல்லுங்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–ல் பட்டம் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன காரணத்திற்காக 2003–ல் T.N.E.B.–யிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுவிட்டு, 2003 முதல் 8 ஆண்டுகள் வழக்கறிஞராகவும், 2011–ல், அம்மா அவர்களின் தயவால் 5 ஆண்டுகள் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகவும் பணியாற்றினேன். என் தந்தை திரு. ரெங்கசாமி அவர்கள் நான் பிறந்த பின் 2 வருடங்களிலேயே இறந்துவிட்டார்கள். என் தாய் எனது திருமணத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டார்கள். ஆகவே, என் தாய், தந்தை ஆகிய இருவர் ஸ்தானத்திலும் இருந்து, என்னை வெற்றி பெறச் செய்து, இந்த அவைக்கு அறிமுகப்படுத்திய மாண்புமிகு அம்மா அவர்கள், நான் இந்த அவையில் இருக்கும் அழகையும், முழுமையாக என்னுடைய வளர்ச்சியையும் கண்டு மகிழவில்லையே என்ற ஆதங்கத்தை இந்த அவையில் குறிப்பிடுகின்றேன். காரணம் என்னவென்றால், என்னைப் பெற்ற தாய்தான் இதைப் பார்க்கவில்லை. என்னை வளர்த்த தகப்பனார்கூட இதைப் பார்க்கவில்லை. என்னை இந்த அளவிற்கு ஆளாக்கிய என்னுடைய தாயை நான் வணங்குகிறேன். மாண்புமிகு சின்னம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னை இந்த அளவிற்கு அரசியலில் வழிகாட்டி வாழ்வு தந்த எங்கள் அண்ணன் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். அதுபோல என்னுடைய தொகுதிக்கு நல்ல பதிலைத் தர இருக்கின்ற மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில். . . (குறுக்கீடுகள்) கேள்விக்கு வந்துவிட்டேன். நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், இப்பொழுது நாங்கள் 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான்.

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினராக நான் இருக்கின்றேன். எதிர்க்கட்சியைச் சார்ந்த அண்ணன், திரு. ஐ. பெரியசாமி அவர்கள் அந்த ஊரில் பிறந்தவர். அவர்களுடைய வாரிசு அன்பிற்குரிய திரு. செந்தில் அவர்கள், அந்தத் தொகுதியைச் சார்ந்தவர். ஆக மூன்று பேர்களும் சட்டமன்ற உறுப்பினர்களாக

நிலக்கோட்டை தொகுதியில் இருக்கின்றோம். இருந்தபோதிலும், நான் பிறந்த பொழுதே சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள், அமைதியாக இருங்கள்.*

திரு. ஆர். தங்கதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் நான் பிறந்த ஆண்டிலிருந்தே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள். நிலக்கோட்டை தொகுதி மிகவும் பழமைவாய்ந்த தொகுதியாகும். அத்தொகுதியில் விவசாயப் பெருங்குடிமக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்கள் பூக்களை மட்டும் பயிரிடுகிறார்கள். அந்தப் பூக்களை பயிரிட்டு, எடுத்துவந்து, தமிழ்நாட்டிலேயே பெரிய பூ மார்க்கெட் உள்ள எங்கள் பகுதியில் விற்பனை செய்கிறார்கள். மீதமுள்ள பூக்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் மற்றும் சென்னை மாநகரத்திற்கும் அனுப்பப்படுகிறது. அதுபோக மீதம் உள்ள பூக்களை அவர்கள் கீழே கொட்டிவிடுகிறார்கள். பூக்கள் எல்லாம் வீணாகப் போகின்றது. எங்களுடைய தொகுதியில், இதுவரையில் எந்தவித வளர்ச்சியும் இல்லை. இனிமேலாவது வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, இந்தத் தொழிற்சாலையையாவது தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் மிகவும் கஷ்டப்பட்டு நிறைய கேள்வியைக் கேட்டிருக்கிறார். பார்த்து பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டைப் பகுதியில் 1,002 ஹெக்டேர் பரப்பளவில் வருடத்திற்கு 7,528 மெட்ரிக் டன் மல்லிகை மலர்கள் உற்பத்தியாகின்றன. இவை உள்ளூர் பயன்பாடு, வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலத்திற்கும் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இப்பகுதியில் உற்பத்தியாகும் மல்லிகை மலர்கள் வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்குப் போதுமானதாக*

இல்லை. மல்லிகை மலர்களில் குண்டு மல்லி, முல்லை மற்றும் ஜாதி மல்லி ஆகிய வகைகள் உள்ளன. இவற்றில் ஜாதி மல்லி மட்டுமே, வாசனைத் திரவியம் தயாரிக்க ஏற்றதாகும்.

முற்பகல் 10–55

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டைப் பகுதியில், தற்போது நான்கு தனியார் சிறு தொழில் நிறுவனங்களும், ஒரு தனியார் நடுத்தரத் தொழில் நிறுவனமும் பூக்களிலிருந்து வாசனைத் திரவிய மூலப்பொருட்களான floral, concretes and absolutes தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. சிறிய அளவில் ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமெனில், நாளொன்றுக்கு 5 மெட்ரிக் டன் பூக்கள் இருந்தால் மட்டுமே, அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருக்கும். எனவே, இப்பகுதி வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைப்பதற்கு சாத்தியமற்றதாக உள்ளது.

நிலக்கோட்டைப் பகுதியிலிருந்து மல்லிகை கொள்முதல் செய்து, வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க தனியார் எவரேனும் முன்வரும்பட்சத்தில், மாவட்ட தொழில் மையத்தின்மூலம் தகுதியின் அடிப்படையில், முதலீட்டு மானியம், மின் மானியம், மின்னாக்கி மானியம், மதிப்புக் கூட்டு வரி மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம் போன்ற மானிய உதவிகளை வழங்கி, புதிய தொழிற்சாலை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கதுரை அவர்கள்.

திரு. ஆர். தங்கதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், நானும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறையில் கடந்த வாரம் சென்று ஒரு கோரிக்கையை வைத்தோம். அதாவது, எங்கள் மாவட்டத்திற்குப் பின்னர் தொடங்கப்பட்ட மாவட்டத்திற்கெல்லாம் மருத்துவக் கல்லூரியைத் தந்து விட்டார்கள். எங்களுடைய மாவட்டத்திற்கு இப்போதாவது முன்னுரிமை தருவார்கள் என்ற அடிப்படையில், நானும்,

அண்ணன் வனத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம். நிலக்கோட்டை தொகுதிக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, எங்களுடைய மாவட்டத்தின் தலைநகருக்கு, பெருமை சேர்க்கின்ற வகையில் ஒரு மாவட்ட மருத்துவக் கல்லூரி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பணிவுடன் வேண்டி, விரும்பி கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாத மாணிக்கத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட வலையங்குளம், பாரப்பத்தி, எளியார்பத்தி, கூடக்கோவில் போன்ற பத்து ஊர்களுக்கும் மேற்பட்ட இடங்களில் சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் 5,000 மெட்ரிக் டன் மல்லிகை மலர்களை சாகுபடி செய்து வருகிறார்கள். அவற்றை விற்பனை செய்தும், அதற்குப் போதிய விலை கிடைக்காத நிலையுள்ளது. அவற்றை முறையாக பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தருவதோடு, அப்பகுதியில் ஒரு வாசனத் திரவியத் தொழிற்சாலை அமைத்துத் தந்தால், அப்பகுதி வாழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான வலையங்குளம் பகுதியில் ஒரு வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், கடந்த ஐந்து ஆண்டுகளில், சுமார் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயிகளால் மல்லிகைப் பூ சாகுபடி செய்யப்படுகிறது. இதில் திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் மட்டும் 490 ஹெக்டேரில் மல்லிகைப் பூ சாகுபடி செய்யப்பட்டு

வருகிறது. ஹெக்டேர் ஒன்றுக்கு சராசரியாக ஆண்டொன்றுக்கு 8 முதல் 10 டன் வரையில் மகசூல் பெறப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் மேற்கண்ட சாகுபடி பரப்பளவில் மல்லிகை ஆண்டொன்றுக்கு 15,000 டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் மலர்களுக்கு சில்லரை விற்பனையிலேயே நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மலர் கமிஷன் மண்டிகளில் விற்பனை செய்து வருகிறார்கள்.

மேலும், மதுரை மாவட்டத்தில், திருப்பரங்குன்றம் ஒன்றியத்தில் மல்லிகைமூலம் வாசனத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மூன்று உள்ளன. இத்தகைய மல்லிகை குறிப்பிட்ட பருவத்தில் மட்டும் அதிகமான அளவில் கிடைக்கப் பெறுவதால், அப்பருவக் காலத்தில் மட்டுமே மேற்காணும் தொழிற்சாலைகள் இயங்க முடிகிறது. மல்லிகை போதுமான அளவிற்குக் கிடைக்கப்பெறாததால், இத்தகைய தொழிற்சாலைகள் மூலப்பொருட்கள் பற்றாக்குறையின் காரணமாக வருடந்தோறும் இயங்க முடிவதில்லை. எனவே, அரசு சார்பில் மதுரை மாவட்டத்தில், நறுமணப் பூக்களைப் பயன்படுத்தி, வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியில் வலையங்குளம் கிராமத்தில், அரசுக்குச் சொந்தமான தொழிற்பேட்டை அமைக்க உகந்த நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதியாதாரங்களுடன், தொழில் திட்டங்களுடன், தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோர்கள் முன்வந்தாலோ அல்லது தொழில்முனைவோர் சங்கம் ஏதேனும் குறைந்தபட்சம் 50 ஏக்கர் தனியார் நிலங்களுடன் தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு முன்வந்தாலோ, தொழிற்பேட்டை அமைப்பது குறித்து, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

2017 ஜூலை 10]

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடியை அடுத்த மாதவரம் தொகுதி, மோரை ஊராட்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள், 100 தொழில்முனைவோர்களாக இணைந்து தொழிற்பூங்காவை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த ரூபாய் 15 கோடி infrastructure support (உட்கட்டமைப்புக்கான நிதி) கிடைக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். குறிப்பாக, Chennai Metropolitan Region அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த இடமும் அதற்குக் கீழே வரப் போகிறது. எனவே, இருக்கிற Revenue Department classification பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடும். அதனால் மீண்டும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து 3,500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய அந்த மோரை தொழிற் பூங்காவிற்கு அம்மா அறிவித்த ரூபாய் 15 கோடி உதவித் தொகை கிடைக்க ஏற்பாடு செய்வாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறைரீதியாகப் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

பேருந்து வசதி

***5862—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடியிலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?